<u>சுருக்கம்</u>

மாற்றுத்திறனாளிகள் நலத் துறை – அறிவிப்பு – மாநில முழுவதும் உள்ள 62 விளையாட்டு அரங்குகளை மாற்றுத் திறனாளி விளையாட்டு வீரர்கள் எளிதில் அணுகும் வகையில் தடையற்ற சூழலினை ஏற்படுத்துவதற்கான தணிக்கை மேற்கொள்ளுதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

<u>மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந–3.1)த் துறை</u>

அரசாணை (நிலை) எண்:32

நாள்: 11.11.2022.
சுபகிருது, ஐப்பசி 25,
திருவள்ளுவர் ஆண்டு 2053.

படிக்கப்பட்டது:

1. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு நாள் 21.04.2022.
2. மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் / மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் கடித ந.க.எண்.1575/மா.தி.ந/2022, நாள் 22.04.2022.

******

<u>ஆணை:</u>

தமிழ்நாடு சட்டமன்ற பேரவை கூட்டத்தில் 21.04.2022 அன்று நடைபெற்ற மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்ந்த மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பின்வரும் அறிவிப்பு வெளியிடப்பட்டது:–

> **"பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளும் மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு அரங்கில் தடையற்ற சூழல் அமைக்க மாநிலம் முழுவதும் உள்ள 62 விளையாட்டு அரங்கங்களில் ரூ.37.20 இலட்சத்தில் தணிக்கை மேற்கொண்டு தடையற்ற சூழல் ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்".**

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அறிவிப்பின்படி 62 விளையாட்டு அரங்கங்களில் மாற்றுத்திறனாளி வீரர்களுக்கான தடையற்ற சூழல் அமைக்க ஏதுவாக தணிக்கை மேற்கொள்ளுவதற்கு, மாற்றுத்திறனாளிகள் நலத் துறையின் மூலம் பதிவு செய்யப்பட்டுள்ள 12 நிறுவனங்களில் குறைந்த விலைப்புள்ளியின் அடிப்படையில் நிறுவனங்கள் தெரிவு செய்து, அனைத்து மாவட்டங்களிலும் உள்ள 32 பெரிய விளையாட்டு அரங்கங்கள், 25 சிறு அரங்கங்கள் மற்றும் சென்னையிலுள்ள 5 நவீன அரங்கங்கள்

ஆகியவற்றை மாற்றுத்திறனாளிகள் நலத் துறையின் நிதி ஒதுக்கீட்டான ரூ.37.20 இலட்சம் செலவில் தடையற்ற சூழலினை ஏற்படுத்திட உரிய தணிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு, தணிக்கைக்குபின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மூலம் தடையற்ற சூழல் அமைப்பதற்கான நிதி ஒதுக்கீடு கோரப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளலாம் என மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர் / மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் அரசுக்கு தெரிவித்துள்ளார்.

3. மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரின் கருத்துருவினை நன்கு பரிசீலித்து, தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள 32 பெரிய விளையாட்டு அரங்கங்கள், 25 சிறு அரங்கங்கள் மற்றும் சென்னையிலுள்ள 5 நவீன அரங்கங்கள் ஆக மொத்தம் 62 விளையாட்டு அரங்கங்களை மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்கள் பயன்படுத்தும் வகையில் தடையற்ற சூழலினை ஏற்படுத்துவதற்கான தணிக்கை மேற்கொள்வதற்கு ரூ.37,20,000/- (ரூபாய் முப்பத்தி ஏழு இலட்சத்து இருபது ஆயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே, பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை பின்வரும் புதிய கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

> 2235 – சமூகப் பாதுகாப்பும் – நலனும் – 02 – சமூக நலன் 001 – நெறிப்படுத்தலும் நிருவாகமும் – மாநிலச் செலவினங்கள் AM விளையாட்டு அரங்கங்களில் தடையில்லா உள்கட்டமைப்புக்கான தணிக்கை மேற்கொள்ளுதல் – 333 – தொழில் முறை, சிறப்பு பணிகளுக்கு தொகை கொடுத்தல் – 03 – சிறப்புப் பள்ளி.
>
> (IFHRMS த.தொ.கு.2235 02 001 AM 33303)

5. மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு "புதுப் பணி" (New Service) குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதித்(வ.செ.பொ.I) துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். அடுத்து வரும் துணை மானியக் கோரிக்கையில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பெறும் வரையில் நடப்பாண்டிற்கு தேவைப்படும் செலவினத்தை சரியாகக் கணக்கிட்டு, எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறத் தேவையான விண்ணப்பத்தை எதிர்பாரா செலவின நிதி விதிகள் 1963-ல் உள்ள அட்டவணை "A" படிவத்துடன் இவ்வரசாணையின் நகலுடன் இணைத்து நிதித்(வ.செ.பொ.I) துறைக்கு நேரடியாக அனுப்பி வைக்குமாறு மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2022-2023-ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதித்(வ.செ.பொ.I/ச.ந.) துறைக்கு அனுப்பி வைக்குமாறு மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6. மேற்குறிப்பிடப்பட்டுள்ள 62 விளையாட்டு அரங்கங்களில், தணிக்கை அறிக்கையின் அடிப்படையில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்கள்

பயன்படுத்தும் வகையில் தடையற்ற சூழலினை ஏற்படுத்துமாறு அத்துறை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

7. மேற்கண்ட புதிய கணக்குத் தலைப்பிற்கு ஆணையர், மாற்றுத்திறனாளிகள் நலம் அவர்கள் மதிப்பீடு, கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரியாவார்.

8. மேற்படி துவங்கப்பட்டுள்ள புதிய கணக்குத் தலைப்பை தங்களது பதிவேடுகளில் துவக்கி கொள்ளுமாறு சம்மந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர் / கருவூல அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சாரா குறிப்பு எண்.47944/நிதி(சந)த் துறை, நாள்.08.11.2022-ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதி ஒதுக்கீடு பேரேடு எண். 1721 (ஆயிரத்து எழுநூற்று இருபத்தொன்று)
(IFHRMS ASL No.2022111721)

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**இரா. ஆனந்தகுமார்,**
**அரசு செயலாளர்.**

பெறுநர்
மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் / ஆணையர், சென்னை-5.
அரசு முதன்மைச் செயலாளர், இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத் துறை, சென்னை-9.
மாநில கணக்காயர், சென்னை-18.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை - 35.

நகல்:-
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் மனித வள மேலாண்மை) அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை - 9.
மாண்புமிகு அமைச்சர் (காலநிலை, பருவ மாற்றம், இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாடு) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9
தலைமைச் செயலாளரின் முதுநிலை முதன்மை தனிச் செயலாளர், சென்னை - 9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின்
முதுநிலை முதன்மை தனிச் செயலாளர், நிதித்துறை, சென்னை - 9.
முதன்மைச் செயலாளரின் முதுநிலை முதன்மை தனிச் செயலாளர் (இளைஞர்
நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை), சென்னை - 9
நிதி(சந/வ.செ.பொ-I/II, வ.வ.I)த் துறை, சென்னை-9.
உள்ளுறை தணிக்கை அலுவலர், சென்னை - 09.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர் 16/11/22
16/11/22